# மூன்றாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 60

தமிழ்

வகுப்பு - ஆறு - ____________

நேரம்: 2மணி

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 10 × 1 = 10

1. அன்னை தெரசாவிற்கு ______________ க்கான நோபல் பரிசு கிடைத்தது.
   அ) பொருளாதாரம் ஆ) இயற்பியல் இ) மருத்துவம் ஈ) அமைதி
2. 'நூலாடை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை ஈ) நூலா + ஆட
3. ஏழைகளுக்கு உதவி செய்வதே ______________ ஆகும்.
   அ) பகை ஆ) ஈகை இ) வறுமை ஈ) கொடுமை
4. ஒருவர் செய்யக் கூடாதது ______________
   அ) நல்வினை ஆ) தீவினை இ) பிறவினை ஈ) தன்வினை
5. காரணப்பெயரை சுட்டுக ______________
   அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை
6. பொருந்தாத சொல்லை வட்டமிடுக.
   அ) மாநாடு ஆ) ஐ இ) கு ஈ) ஆல்
7. புரட்சிக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் ______________
   அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
   இ) திருவள்ளுவர் ஈ) மறைமலையடிகள்
8. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் ______________
   அ) மனித வாழ்க்கை ஆ) மனித உரிமை
   இ) மனித நேயம் ஈ) மனித உடைமை
9. உள்ளத்தில் ______________ இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
   அ) மகிழ்ச்சி ஆ) மன்னிப்பு இ) துணிவு ஈ) குற்றம்
10. புத்தரின் வரலாற்றைக் கூறும் நூல் ______________
    அ) ஜீவ ஜோதி ஆ) ஆசிய ஜோதி இ) நவ ஜோதி ஈ) ஜீவன் ஜோதி

**II. பொருத்துக.** 5 × 1 = 5

11. தீவுதிலகை - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்
12. ஆதிரை - சோழநாடு
13. வள்ளலார் - கற்புக்கரசி

14. பூம்புகார் - புத்தபீடிகை
15. அன்னை தெரசா - பசிப்பிணி போக்கியவர்

## III. மனப்பாடப்பாடல் 4 + 2 = 6

16. 'அன்னை' என தொடங்கி வாசலிது என 'முடியும்' பாரதம் அன்றைய நாற்றங்கால் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
17. 'விடல்' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

## IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. 5 × 2 = 10

18. பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?
19. அணி என்றால் என்ன?
20. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
21. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?
22. சொல் என்றால் என்ன?
23. எறும்பு எதற்காக பாடுபடுகிறது?

## V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 × 3 = 9

24. தாயுமானவர் வேண்டுவன யாவை?
25. எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தப்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?
26. தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.
27. மணிமேகலை சிறு குறிப்பு வரைக.

## VI. கட்டுரை வரைக. 1 × 10 = 10

28. "விளையாட்டு மைதானம்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

## VII. வினாக்களுக்கு ஏற்ப விடையளி. 2 × 5 = 10

29. காரணம் கண்டு எழுதுக.

அ) மாடு அம்மா என்று கத்துகிறது.
ஆ) கோவில் மணி அடித்தது.
இ) பயிர் வாடியது.
ஈ) குழந்தை கொழுகொழு என்று இருக்கிறது.
உ) புத்தக விலை அதிகமாகிவிட்டது.

30. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) அமுதசுரபி
ஆ) உரிமை
இ) மாற்றம்
ஈ) அமைதி
உ) நல்லறம்